# சிறுவர்

# அமுதம்

19.06.99


எண்ணம் 10 கிண்ணம். 6



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

# கோழிக்கு அண்ணனா முதலை?




வெகு காலத்துக்கு முன் ஒரு காட்டில் கோழி ஒன்று வாழ்ந்து வந்தது. அருகிருந்த ஆற்றுக்கு அது நாள்தோறும் சென்று தண்ணீர் குடித்து விட்டுத் திரும்பும். அந்த ஆற்றில் முதலை ஒன்று இருந்தது. தண்ணீர் குடிக்க வரும் கோழியைக் கவனித்தது அது. எப்படியாவது கோழியைப் பிடித்து உண்ண நினைத்தது. வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தது. கோழி வழக்கம் போல ஆற்றில் தண்ணீர் குடிக்க வந்தது. பதுங்கி இருந்த முதலை அதன் மீது பாய்ந்து பிடித்துக் கொண்டது.

"முதலை அண்ணா! நான் உன் அன்புத் தங்கையல்லவா? தங்கையிடம் அன்பு காட்ட வேண்டிய அண்ணன் அதற்குத் துன்பம் தருவானா?. என்னை விட்டுவிடு." என்றது கோழி. அதன் பேச்சை

நம்பிய முதலை தன் பிடியை விட்டது. "முதலை அண்ணா! நன்றி." என்று சொல்லி விட்டுச் சென்றது கோழி.

கோழியை விடுவித்த பின் முதலை "கோழிக்கு நான் எப்படி அண்ணனாக முடியும்? அதுவோ நிலத்தில் வாழ்கிறது. நானோ நீரில் வாழ்கிறேன். பறப்பதற்கு அதற்குச் சிறகுகள் உள்ளன. எனக்கோ சிறகுகள் இல்லை. தோற்றத்தில் கூட இருவருக்கும் இடையே எந்த ஒற்றுமையும் இல்லை." என்று யோசித்தது. பின் "ம்ம்........ அந்தக் கோழி தங்கையென்று என்னை ஏமாற்றித் தப்பிக் கொண்டது. மீண்டும் என்னிடம் அது சிக்காமலா போகும்?. அப்போது பார்த்துக் கொள்கிறேன்." என்று தனக்குள் சொல்லிக் கொண்டது முதலை.

மறுநாள் ஆற்றில் பதுங்கி இருந்தது முதலை. கோழி தண்ணீர் குடிக்க அங்கே வந்தது. அதைப் பாய்ந்து பிடித்துச் கொண்டது முதலை. "அண்ணா! இது என்ன விளையாட்டு?. யாராவது தங்கையிடம் இப்படிச் கேலி செய்து' விளையாடுவார்களா?. என்னை விடு." என்று கோபத்துடன் சொன்னது



கோழி. இதைக் கேட்டுக் குழப்பம் அடைந்த முதலை, தன் பிடியை விட்டது.

"அண்ணா! என்னிடம் இப்படி விளையாடாதே!. இதுவே கடைசி முறையாக இருக்கட்டும்." என்று சொல்லி விட்டுக் கோழி அங்கிருந்து சென்றது. "நான் இந்தக் கோழிக்கு அண்ணனா? இப்படிச் சொல்லியே என்னைக் குழப்புகின்றதே?. எப்படி உண்மையை அறிவது?" என்று சிந்தித்தது முதலை. ஆற்றில் வாழும் ஆமை ஒன்றின் நினைவு அதற்கு வந்தது.

அந்த ஆமை அறிவு நிரம்பியது. அதனிடம் சென்று இது பற்றிக் கேட்போம். அதற்கு எல்லாம் தெரியும்." என்று நினைத்தது. ஆற்றுக்குள் ஆமையைத் தேடியது. ஆமையைச் சந்தித்தது. "ஆமையாரே! நான் குழப்பத்தில் இருக்கின்றேன். நீங்கள் தான் என் குழப்பத்தைத் தீர்த்து வைக்க வேண்டும்." என்றது. "என்ன குழப்பம் சொல்?" என்றது ஆமை. தனக்கும் கோழிக்கும் இடையே நடந்ததை எல்லாம் சொன்னது முதலை.

"ஆமையாரே! நான் நீரில் வாழ்கிறேன். அந்தக் கோழி நிலத்தில் வாழ்கிறது. அதற்குச் சிறகுகள் உள்ளன. எனக்குச் சிறகுகள் இல்லை. எனக்கும் கோழிக்கும் வேற்றுமை உள்ளதே தவிர எந்தவிதமான ஒற்றுமையும் இல்லை. எனக்கு எப்படி

அந்தக் கோழி தங்கையாக முடியும்?" என்று கேட்டது.

ஆமை சிரித்தது. பின், "முதலையாரே, கோழி உமக்கு மட்டும் தங்கையல்ல! எனக்கும் தங்கை தான். ஆற்றில் நாம் வாழ்ந்தாலும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கிறோம். நம்மைப் போலக் கோழியும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கிறது. இதிலிருந்து அது நம் சகோதரி என்ற உண்மை உனக்குப் புரியவில்லையா?" என்று கேட்டது.

ஆமையின் பேச்சை உண்மை என்று நம்பியது முதலை. கோழியைத் தன் தங்கையாக நினைத்தது. எல்லா முதலைகளிடமும் இந்தச் செய்தியைச் சொன்னது. அதன் பிறகு கோழிகளைப் பிடிப்பதை முதலைகள் விட்டு விட்டன. அதனால் தண்ணீர் குடிக்க வரும் கோழிகளை முதலைகள் பிடித்து உண்ணுவதில்லை.

வேடிக்கைக்கதைகளில் இருந்து எழுதி அனுப்பியவர்:
ஆர்த்தி புஸ்பராஜ்

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

எந்த ஒரு செயலையும் அதற்குரிய காலங்களில் செய்ய வேண்டும்.

-ஔவையார்-

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

## வெண்ணிலா



பாலைப் போல வெண்ணிலா
  பரந்து நிற்கும் வெண்ணிலா
கோலம் காட்டும் வெண்ணிலா
  கொள்ளை அழகு வெண்ணிலா

வட்டமான வெண்ணிலா
  வளரும் நல்ல வெண்ணிலா
வான வீதி தன்னிலே
  வந்து உலாவும் வெண்ணிலா

வெள்ளிக் கூட்டம் மத்தியில்

விளங்குகின்ற வெண்ணிலா
அள்ளி இன்பம் தருகின்ற
அழகு மிக்க வெண்ணிலா

தம்பி தங்கை அனைவரும்
தழுவத் துடிக்கும் வேளையில்
கரிய முகிலுள் மறைந்து நீ
கவலை தருவது ஏனோ சொல்?

தனக்குப் பிடித்த பாடலை எழுதி அனுப்பியவர்:
செ.சுபண்யா

வாழ்க்கை என்பது மாடிப்படி போன்றது. தானாக இயங்கிக் கொள்ளும் படிகள் இல்லை. ஒவ்வொரு படியாகத்தான் மேலே ஏற வேண்டுமே தவிர, ஒரேயடியாகப் போக முடியாது.

-ஏச்.எல். டேவிஸ்-

முட்டாள்களின் மத்தியில் அறிவாளி இருப்பது, குருடர்களின் மத்தியில் அழகிய பெண் இருப்பதைப் போன்றது.

-இமாம்.ச.அதி-

# அம்மா



அம்மா குடும்பத்துக்காக எவ்வளவு கஷ்டப்படுகிறாள். அப்பா தையல் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். அப்பா திடீரென்று நோயாளியாகி விட்டார். வீட்டு வேலைகளை முடித்து விட்டு, வேறு வீடுகளுக்கும் உதவி என்ற பெயரில் வேலைக்காரியாகி இருந்தாள். அவர்களிடம் பணம் வாங்குவது கௌரவக் குறைவாக இருந்ததால், வாங்க மறுத்து விடுவாள். அவர்களுக்கும் அது தெரியும். ஆனபடியால் கடையில் அரிசி, சீனி, மா, தேயிலை என்று வாங்கிக் கொடுத்து விடுவார்கள்.

அதில் தான் சமைத்துப் போடுவாள். அவள் உழைப்பெல்லாம் அப்பாவின் மருந்துச் செலவுக்கும்,

அவனின் படிப்புச் செலவுக்கும் போய்விடும். அதுவும் எவ்வளவோ சிரமப்பட்டுத்தான். உழைத்து உழைத்து அம்மா நன்றாகக் இளைத்து விட்டாள். வீட்டுக்கு உடுத்திக் கொள்ளும் சேலையில் கூட எத்தனை கிழிசல்கள். ஊசி நூல் கொண்டு தைத்திருக்கிறாள். காதில் சின்னத் தோடும், மூக்கில் ஒரு மூக்குத்தியும் தான். அதையும் விற்கலாம் என்று அம்மா முடிவு செய்திருந்தாள். ஆனால் அடுத்த வீட்டு மாமிதான் தடுத்து விட்டாள்.

"ஏதாவது அவசர சமயங்களுக்கு அதுதான் கைகொடுக்கும். அதையும் விற்று மூளியாகி விடாதே!." என்று மாமி தடுத்ததால் தான் அவைகளை விட்டு வைத்திருக்கிறாள். பழைய சேலைதான். அந்த தோடும் மூக்குத்தியும், நெற்றிப் பொட்டிலும் அம்மா அழகாகத் தான் இருக்கிறாள். இதில் என்ன பெருமை?........ . ஒரு நல்ல சேலை அம்மாவிடம் இல்லை. எப்படியாவது ஒரு சேலை வாங்கிக் கொடுக்க வேண்டும்!.

மாணிக்கம் அண்ணை வயலில் கதிர் அறுத்ததற்காகக் தந்த காசு காற்சட்டைக்குள் இருந்தது. இந்தமுறை, காசை அம்மாவிடம் கொடுத்து சேலை வாங்கச் சொல்லி, அம்மாவிடம் பணத்தைக் கொடுத்து விட்டிருந்தேன். அம்மா எந்த நிறச் சேலை வாங்கியிருப்பாள்?. ஆவலோடு வீட்டுக்கு வந்தேன். வந்த வேளையில் அம்மா இல்லை. சிறிது நேரத்தில் அம்மா கையில்

பையோடு வந்தாள். அம்மா சேலையை எடுத்துக் காட்டுவாள் என்று பொறுமையுடன் இருந்தேன்.

அம்மா எனக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்தாள். என் தலையைக் கோதிக் கொண்டாள். பின் என்னைப் பார்த்துச் சிரித்தாள். கையில் இருந்ததை என்னிடம் கொடுத்தாள். பிரித்துப் பார்த்ததும் எனக்குக் கோபம் வந்தது. என் தலையைக் கோதியவாறே அம்மா சொன்னாள், “எனக்கு எதற்காக இப்போ சேலை. நீ பள்ளிக்கூடம் போற பிள்ளை. அப்பா வெளியே ஆஸ்பத்திரிக்குச் செல்ல நல்ல உடுப்பில்லை. அப்பாவுக்கும் உனக்குமாக சேட்டுக்கள் வாங்கினேன். மலிவாகப் போட்டிருந்தார்கள்.” .

இந்த அம்மாவை என்ன செய்யலாம்!. சொல்லுங்கள்.

> இரண்டாந்தரமான மனிதர்களைக் கொண்டு முதல் தரமான அரசாங்கத்தை உருவாக்க முடியாது.
> -அரிஸ்டோட்டில்-

> மனித நாகரீகத்தைத் தோற்றுவித்தவன் ஆணாக இருக்கலாம். அதைக் கட்டிக் காப்பவள் பெண் தான்.
> -இந்தியப் பழமொழி-

# ராணி மங்கம்மாள்



தென் இந்தியாவில் தமிழகம் மூன்று இராச்சியங்களைக் கொண்டிருந்தது. சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்பவை அவையாகும். வட இந்தியரின் படையெடுப்பாலும், ஐரோப்பியரின் படையெடுப்பாலும், அரேபியர்களின் படையெடுப்பாலும், கலாச்சாரத்தில் பல மாறுதல்களை அடைந்தாலும், தமிழகம் தனக்கென்ற பண்பாட்டோடு இருந்தது. அதுவும் மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டியநாடு தமிழைப் போற்றி வளர்த்ததை வரலாறு கூறுகின்றது.

தமிழ் வளர்த்த மதுரையை ஆண்டவர்களுள், ராணி மங்கம்மாள் என்ற வீராங்கனை புகழ்

பெற்றவராவார். அவரது நீதியான ஆட்சியைப் பார்த்து அன்னியரான ஐரோப்பியரே வியந்தனர். அவரது நீதியான ஆட்சியைப் பற்றி அறிவதற்கு இந்தக் கதை ஒன்றே போதுமானது.

தன் ஆட்சியின் நிர்வாகத்தின் ஒரு பகுதியைத் தன் தம்பியைப் பொறுப்பாக்கி விட்டிருந்தார். தன் மீது மிகுந்த அன்பு கொண்ட தம்பி நல்ல முறையில் நிர்வாகத்தைக் கவனித்து வருவது ராணிக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தனக்குப் பின் தன் தம்பியே பதவிக்கு வர வேண்டுமென்று ராணி விரும்பினார். ராணியின் சகோதரனான காரணமும், தன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது என்ற எண்ணமும் தம்பியைக் கர்வம் கொள்ள வைத்தது.

அதனால் பலவிதமான அட்டகாசங்களைத் தம்பி செய்து வந்தான். இது நீதிக் காவலர்களுக்குத் தெரிந்தபோதும், ராணியின் சகோதரனானபடியால் ராணிக்குத் தெரியப்படுத்தக் காவலர்கள் தயங்கினார்கள். இதனால் ஆட்சி நிர்வாகத்தில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. இது ராணியின் காதுகளுக்கு எட்டியது. உடனடியாக விசாரணை நடத்துமாறு ராணி நீதிமன்றத்துக்கு ஆணை பிறப்பித்தார்.

நீதி விசாரணையின் போது, மரண தண்டனை பெறுமளவுக்கு ராணியின் தம்பி குற்றம் செய்திருப்பது தெரிய வந்தது. இறுதித் தீர்ப்பு வழங்க நீதிக்காவலர்கள் தயக்கம் காட்டினார்கள்.

இது இரகசியச் சேவகர்கள் மூலம் ராணிக்குத் தெரிய வந்தது. ராணி தானே நீதிமன்றத்தைக் கூட்டினார். தன் தம்பியை நீதிமன்றத்துக்கு வரவழைத்தார். தன் உடன் பிறந்தவன் என்றோ, அன்போடு அரவணைத்து சோறூட்டி வளர்த்த தம்பி என்றோ, ராணி காருண்ணியம் காட்டவில்லை.

தன் அன்புச் சகோதரனின் இறப்புக்குத் தானே காரணமானதை எண்ணி கண்ணீர் மல்க மரணதண்டனையைத் தானாகவே நிறைவேற்றினார். ராணி மங்கம்மாளின் ஆட்சியின் நீதிக்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

வாழ்க்கை என்றால் உழைத்துக் கொண்டே இருப்பதுதான் என்பதை உணர்ந்து வேலை செய்கிறீர்களா?. அப்படி என்றால் உங்கள் பாதம் பட்ட இடமெல்லாம் ரோஜாச்செடிகள் நிச்சயம் முளைக்கும்.

-லத்தீன் பழமொழி-

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் சிறப்பான பகுதி உண்டு. அது பெருமை கௌரவம் பார்க்காமல் அவன் அன்போடும் கருணையோடும் செய்கின்ற சில செயல்கள் தான்.

-வில்லியம் வோர்ட்ஸ்வெல்த்-

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

## ஔவையார்



நன்கு படித்த புலவர்களிடத்தில் போட்டி இருப்பது இயற்கை. அதிலும் கம்பர் அரசகவியான படியினால், அவருக்கு அரசசபையில் மதிப்பு இருந்தது. ஆனால் ஔவையாரோ ஏழைக்கும் பாடுவார். செல்வர்களுக்கும் பாடுவார். இதனால் ஔவையைச் சிறிது குறைந்த நிலையிலேயே மதிப்பிடுவார். இது ஔவையாருக்கும் தெரியும். இதனால் இருவருக்குமிடையில் போட்டி இருக்கும்.

கம்பரைக் குறைவாகக் கூற சோழன் இடங்கொடுக்கவேயில்லை. சோழனுக்கு எப்படியாவது தன் கருத்தைத் தெரிவிக்க ஔவையார் எண்ணினார். இதனால் "அரசனே, உலகத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் திறமையள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்றால், அது அவரவர்களின் பயிற்சித் திறத்தால் ஏற்படுவதாகும். பழகப் பழக எதுவுமே இலகுவாகி விடும்.

இதனை இப்பாடல் மூலம் அரசனுக்கு விளக்கினார்:

“சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்- நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக்குணம்.”

“சித்திரம் வரைவோரைப் பார்க்கிறோம். அவர்கள் மட்டுமா சித்திரம் வரைவதில் வல்லவர்களாக இருக்கிறார்கள் என்று நினைக்கின்றாயா? இல்லை. சித்திர வல்லுனர்கள் இன்னும் எத்தனையோ பேர் இருப்பார்கள். வசதி வாய்ப்புக்கள் இல்லாமல் அத்தொழிலையே கைவிட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் வசதி உள்ளவர்களாக இருப்பார்களானால் அவர்களின் வித்துவத் தன்மையை உலகம் அறிந்திருக்கும்.

அதைப் போலவே தூய தமிழைக் கற்றறிந்தவர் சிலர் தான். வசதி, வாய்ப்புப் பெற்றவர்கள் பண்டிதர்களாகின்றார்கள். அவர்களுள்ளும் ஞானம் பெற்றவர்கள் இருக்கின்றார்கள். அது தானாகவே வருவதில்லை. மனத்தில் உறுதியாக இருந்து பழகிய பழக்கத்தில் தமிழ் நன்றாகத் தெளிவடைகின்றது. அந்த மனப்பக்குவம் தமிழறிந்த மற்றவர்களுக்கும் இருக்குமானால் அவர்களும் உலகம் கொண்டாடும் தமிழறிஞர்கள் ஆவார்கள்.

எந்தக் கல்வியானாலும் மனத்தில் ஊக்கத்தோடும், உறுதியோடும் பயின்றால் வெற்றியடைய முடியும். அதைப் போலவே ஒழுக்க நெறிகளையும் உறுதியாகக் கடைப்பிடித்து வந்தால் சிறந்த ஒழுக்கமுள்ளவனாக வாழலாம். ஒருவருக்கு இயற்கையாக அமைந்து இருக்கும் குணங்கள் நட்பும், இரக்கம், கொடை இவை மூன்றுமேயாகும். இந்த மூன்று குணங்களையும் உடையவர்கள் தான் பிறவியிலேயே பெரியவர்களாவார்கள். மற்றவை பழக்கத்தினால் வருபவை." என்று இப்பாடல்கள் மூலம் விளக்கியிருக்கின்றார் ஔவையார்.

நம்மைத் தெரிந்து கொள்ளாமல் வெளி உலகைத் தெரிந்து கொள்ள முடியாது.

-ரமணமகரிஷி

செல்வத்தை அடிக்கடி குறை கூறுகிறார்கள். ஆனால் அதை யாரும் மறுப்பதில்லை.

-டென்மார்க் பழமொழி-

நீங்கள் செய்யக்கூடாத செயல்களை நாளை நாளை என்று தள்ளிப் போட்டு விடுங்கள்.

-மாரிஸ்-

# சார்லி சப்ளின்



*Limelight*, 1953

தன்னைக் “கம்னியூஸ்ட்” என்று முத்திரை குத்தப்பட்டதை எதிர்த்துச் சார்லி எதைக் கூறியபோதும் அது எடுபடவில்லை. பத்திரிகைகள் அவரைப் பலவிதமாக இழிவு படுத்திப் பிரகடனப்படுத்தின. அதேவேளையில் யுனைற்றெட் ஆட்டிஸ்ற் நிறுவனமும் பொருளாதாரத்தில் வீழ்ச்சியை எதிர் நோக்கியது. அதன் பிரதான அங்கத்தவர்களில் சார்லியும் ஒருவர். தொடக்ககாலம் முதல் நிறுவனத்தின் உதவியாளராகப் பணியாற்றிய ஆர்தர்கெல்லியை வேலை நீக்கம் செய்ததை சார்லி தன்னை அவமானப் படுத்தியதாகவே எண்ணினார்.

இணைப் பங்குதாரராகிய மேரி பிக்போர்ட் அல்லது தான் நிறுவனத்தை நிர்வகிக்க வேண்டுமென்ற சார்லியின் நீண்ட நாளைய விருப்பத்தைச் சார்லி நிறைவேற்ற விரும்பினார். ஆனாலும் அப்போதும் சார்லியின் எண்ணம் நிறைவேறவில்லை. இந்தத் துன்ப நிகழ்வுகளிலிருந்து வெளியேற சார்லிக்கு சில வருடங்கள் பிடித்தன. ஒரு சமயம் அமெரிக்காவை விட்டு வெளியேறத் துடித்த மனது, மறுகணமே திரும்பவும் தான் செல்வாக்குடன் வாழ்ந்து விட மாட்டோமா? என்று நினைத்துக் கொண்டது.

சார்லிக்கு ஆறுதலாக இருக்கச் சார்லியின் நண்பர்கள் யாரும் இருக்காததும் சார்லியின் விரக்திக்குக் காரணமாக இருந்தது. டக்லஸ் ஃபோர்பாங்க்ஸ், ஹென்றி பெர்க்மன் காலமாகி விட்டனர். சார்லியின் உதவியாளராக இருந்த ஆல்ஃப் ரீவ்வும் தவிர்க்க முடியாத காரணங்களால் விலகிக் கொண்டார். சார்லியின் சலிப்புக்கு மன ஆறுதலைக் கொடுத்தவர்கள் சார்லியின் மனைவி ஊனாவும் பிள்ளைகளும் தான்.

மனவேதனையோடு வாழ்நாட்களை ஓட்டிக் கொண்டிருக்கச் சார்லிக்கு உடன்பாடில்லாமல் இருந்தது. இன்னொரு படத்தைத் தயாரித்து வெளியிட விரும்பினார் சார்லி. லைம்லைற் (Lime

Light) என்ற பொழுதுபோக்குப் படத்தைத் தயாரித்தார். படத்தில் சார்லி கதாநாயகனாக, கிளேர் புளூம் என்ற நடிகையுடன் நடித்தார். சகோர்தரர் சிட்னி, சார்லியின் குழந்தைகளும் இப்படத்தில் நடித்திருந்தனர். இதில் இன்னொரு சிறப்பம்சம் பஸ்றறர் கீடன் என்ற சிரிப்பு நடிகரும் இதில் நடித்திருந்தார்.

52ஆம் ஆண்டு படம் நியூயோர்க் நகரில் திரையிடப் பட்டது.

(தொடரும்)

துடைக்க முடியாவிட்டால் தூசியாவது தட்ட வேண்டும்.

-ஜேர்மனியப் பழமொழி-

யானையின் உதையை யானையால் தான் தாங்க முடியும்.

-ஆபிரிக்கப் பழமொழி-

பிரச்சனை என்ன என்பதைக் கண்டு விட்டாலே பாதிப் பிரச்சனை தீர்ந்து விடும்.

-கிப்ளிங்-

# ஆணவம்



பிரான்ஸ் நகரத்தில் மன்னராட்சி புரட்சியின் மூலமே அகற்றப்பட்டது. நாட்டில் பெரும்பஞ்சம் ஏற்பட்டிருந்தது. அரண்மனையில் வாழ்பவர்களுக்குப் பஞ்சத்தைப் பற்றி என்ன தெரியும்?. மகாராணியிடம் சென்று மக்கள் முறையிட்டார்கள். மகாராணிக்குப் பஞ்சம் என்றாலே என்ன என்று தெரியாது. அதனால் மக்களைப் பார்த்துப் “பாண் செய்வதற்கு மா இல்லையா? கேக்கைச் சாப்பிடுங்கள்.” என்று சொல்லி அனுப்பினாள்.

மன்னரிடம் பல மனுக்கள் அனுப்பப் பட்டன. எல்லாமே நிராகரிக்கப் பட்டது. அதேவேளையில்

மன்னரின் பிரதிநிதியை மக்கள் சந்தித்தனர். அவன் ஆணவம் பிடித்த சர்வாதிகாரி. அவன் மக்களைப் பார்த்துச் சிரித்தான். பின் "பாண் கிடைக்கவில்லையா? புல்லைத் தின்னுங்கள்." என்று ஏளனமாகக் கூறினான். சில ஆண்டுகளுக்குள் புரட்சி ஏற்பட்டது.

மன்னனையும் ஆட்சியாளர்களையும் மக்கள் சிரச்சேதம் செய்தனர். மன்னரின் பிரதிநிதி வகையாக மாட்டுப்பட்டான். அவனை வாளால் வெட்ட முயன்றபோது, அருகில் நின்றவன் தடுத்தான். எல்லோரும் திகைத்து நின்றனர். அப்போது அவன் புல்லைக் கத்தையாகப் பிடுங்கி அவன் வாயில் திணித்தான். பின் "இனி வெட்டுங்கள்." என்றான்.

> வீணர்களுக்குப் பதிலுரை தந்து கொண்டிருந்தால் நமது படைப்பும் திறமையும் நேரமும் வீணாகிப் போய் விடும்.
>
> -கி.வா.ஜெகந்நாதன்-

> இறைவன் உனக்கு அழகிய முகத்தைக் கொடுத்திருக்கிறார். நீயோ இன்னொரு முகத்தை உருவாக்கிக் கொள்கிறாய்.
>
> -ஷேக்ஸ்பியர்-

# குடிகாரன்



காந்தனின் அப்பா நல்லவர். எல்லோரிடமும் அன்பாகத்தானிருப்பார். ஆனால் அவரை நல்லவன் என்று யாரும் சொல்லுவதில்லை. குடிகாரக் குமாரசாமி என்றே அழைத்து வந்தனர். பிறந்ததில் இருந்தே காந்தன் தகப்பனை மது அருந்திய குடிகாரனாகவே கண்டிருக்கிறான். அம்மா அன்பாகத் திருத்த முயன்றாள். கோபத்தில் திட்டித் திருத்திப் பார்த்தாள். முடியவில்லை. அழுது பார்த்தாள். முடியவில்லை. அப்படியே விட்டு விட்டாள்.

குடிகாரனாக இருந்தபோதும் காந்தனை நன்றாகப் படிக்க வைத்தார். காந்தன் வளர்ந்து பெரியவனானான். படித்துப் பட்டதாரியானான். தந்தை குடிகாரனாக இருப்பது அவனுக்கு வருத்தத்தைத் தந்தது. குடிகாரன் என்று சொல்வது வேதனையைத் தந்தது. தந்தையை எப்படி நல்வழிப்படுத்துவது? என்று அவனுக்குத் தெரியவில்லை. நகரத்திலுள்ள சுகாதார ஸ்தாபனத்தில் அவனுக்கு உத்தியோகம் கிடைத்தது.

வேலையைச் சேவை மனப்பாங்குடன் செய்தான். ஏழை மக்கள் அவனால் புதுவாழ்வு பெற்றார்கள். பல குடிகாரர்கள் திருந்தி வாழ்ந்தார்கள். அவனின் சேவையை அறிந்து கொண்ட அரசாங்கம் அவனைப் பாராட்டி கௌரவித்தது. அதற்கான விழாவிற்கு அவனது தாய்தந்தையையும் விழாவை ஏற்பாடு செய்தவர்கள் அழைத்திருந்தார்கள். விழாவில் பலரும் காந்தனைப் பாராட்டிப் பேசினார்கள்.

கடைசியாக நன்றியுரை சொல்லக் காந்தன் எழுந்தான். நன்றியுரையின் முடிவின் போது, "என்னைப் பாராட்டிக் கௌரவித்து விட்டீர்கள். நான் பாராட்டும் படியாக எதுவும் செய்து விடவில்லை. இந்தப் பாராட்டுவிழா எதற்காகச் செய்தீர்கள்? என்பது எனக்குத் தெரியவில்லை. பெருமைக்குரிய எதையும் நான் செய்யவில்லை. ஏனெனில் என் குடிகாரத் தந்தையை என்னால் திருத்த

முடியவில்லை. நான் எப்படி கௌரவத்துக்கு உரியவனாக முடியும்?" என்று சொல்லி முடித்தான்.

எல்லோரும் அவனை வியப்போடு பார்த்தார்கள். குமாரசாமி தலையைக் குனிந்து கொண்டார். அன்று முதல் மதுக்கடையில் வருவாயில் ஒருபங்கு குறைந்து விட்டது. தந்தையைத் திருத்தி விட்ட பெருமையோடு காந்தன் வாழ்ந்து வந்தான்.

---

## தம்பட்டம் தங்கசாமி

கமலாவும் தன் கணவனான செல்வத்துடன் நகரத்தில் வாழ்ந்து வந்தாள். கணவனான செல்வமும் அவளும் அங்குள்ள கல்லூரி ஒன்றில் ஆசிரியத் தொழில் பார்த்து வந்தார்கள். நகரத்தில் வசதிக் குறைவாக இருந்தபடியால், குழந்தைகள் இருவரையும் செல்வத்தின் பெற்றோர் வளர்த்து வந்தனர். அவர்கள் தங்களின் வசதிக்கேற்ப சிறியவீட்டில் வாழ்ந்து வந்தார்கள். கல்லூரியின் தவணை விடுமுறையின் போது கிராமத்துக்குப் பிள்ளைகளிடம் செல்வார்கள்.

செல்வத்தின் சித்தப்பாவின் மகன் தங்கசாமி கிராமத்தில் இருந்து நகரத்துக்கு வந்தான். எந்த



ஒரு வேலையையும் சரியாகச் செய்ய மாட்டான். ஆனால் தனக்குத் தெரியாதது, தான் அறியாதது எதுவும் இல்லை என்று தம்பட்டம் அடிப்பான். வராத உறவினர் வந்தபடியால் கமலா கல்லூரிக்கு விடுமுறை எடுத்துக் கொண்டு உணவு தயாரித்துக் கொடுத்தாள்.

உணவின் சுவை கண்ட தங்கசாமி இரண்டு நாளில் திரும்புவதாகச் சொன்னவன், அங்கேயே இரண்டு கிழமை தங்கினான். நின்றவன் பேசாமல் இருந்தானா என்றால் இல்லை. கமலா செய்யும் உணவுப் பதார்த்தங்களில் குறை கண்டு பிடித்தான்.

உணவில் மட்டுமல்ல, பாவிக்கும் எண்ணெய், புளி எல்லாவற்றிலும் குறை சொல்லிக் கொண்டான். கமலாவுக்கு வேதனையாக இருந்தது.

தங்கள் கிராமத்தில் விற்கும் அரிசி, பருப்பு வகைகள் சுவையானவை என்றும் , தான் பாவிக்கும் எண்ணெய், அடுத்த கிராமத்திலிருந்து, எண்ணெய் தயாரிக்கும் ஆலையிலிருந்து பெறப்படும் எண்ணெய் என்றும் புழுகினான். கமலாவும் அவன் சொல்லுவதை உண்மை என்று நம்பினாள். ஆனாலும் தன் உணவில் குறைகள் இருக்கின்றதா? என்று செல்வத்திடம் கேட்டாள். செல்வம் அவளிடம் நடந்தவற்றைக் கேட்டான். பின் தனக்குள் சிரித்துக் கொண்டான். அண்ணனான தங்கசாமியின் குணம் அவனுக்குத் தெரிந்தது தானே!.

ஒருவாறு இரண்டு கிழமை முடிந்ததும், தங்கசாமி புறப்பட்டான். அவனை பஸ் நிலையம் வரைக்கும் வந்து பஸ்ஸில் ஏற்றி விட்டான் செல்வம். ஏற்றி விடும்போது "அண்ணா! காசு எடுத்துக் கொண்டு வர மறந்து விட்டேன். திரும்ப இங்கே வரும்போது சுத்தமான எண்ணெய்யும், அரிசி ஒரு மூட்டையும், பருப்பிலும் ஐந்து கிலோ வாங்கி வா." என்றான். தம்பட்டம் அடிக்கும் தங்கசாமி இனித் தங்கள் வீட்டுக்கு வர மாட்டான் என்ற நம்பிக்கையோடு செல்வம் வீட்டை நோக்கி நடந்தான்.

# வினாவிடைப்போட்டி

1. உலகத்தில் மிகப் பெரிய மத அமைப்பு இவர்களுடையது தான்.
   ரோசம், அரமனை, வம்பன், அகம், சுத்தம், தோற்றம், பல்லி, பக்கம், புகலிடம், கர்வம்.

2. உலகில் கூடுதலான தேசியகீதம் இந்த வகையாகத் தான் இருக்கின்றன.
   இன்பம், சைனியம்.

3. உலகத்தில் மிக நீளமான புகையிரத நிலைய மேடையைக் கொண்ட நாடு இது.
   மேன்மை, ஏற்றம், அரங்கு, அவமானம், பங்கம், ஆகாயம், சோளம், பக்கம்.

4. உலகத்தில் அதிகம் திரைப்படங்கள் பார்ப்பவர்கள் இந்நாட்டவர்களே.
   பிணக்கு, அல்லி, கப்பல், அகப்பை, பாயிரம், துன்பம், ஸ்தாபனம்.

5. உலகத்தில் மிகப் பெரிய சட்டசபை உள்ள நாடு இது.
   சீதோளம், பனாமா.

முடிவு திகதி: 5.08.99

# வருத்தும்



தர்மலிங்கம் சொந்தமாக வான் வைத்திருந்தார். சிறந்த முறையில் சாரதிப் பயிற்சியும் பெற்றிருந்ததால் விடுமுறைக் காலங்களில் மட்டுமல்லாது மற்றைய நாட்களிலும் அவருக்கு வேலை இருக்கும். ஒரு சிறிய செல்வந்தராகவே தர்மலிங்கம் இருந்தார். கண்களைப் போல இரண்டு குழந்தைகள். அன்பான மனைவி, வயதான அம்மா. தர்மலிங்கத்தின் தொழில் திடீரென்று மந்த நிலையை அடைந்தது. வேறு சாரதிகளும் அவ்விடத்தில் தங்கி வான், பஸ் வைத்திருந்து தொழில் செய்தார்கள்.

வீட்டின் வசதியும், வாழ்க்கை வசதியும் குறைந்ததனால், பிள்ளைகளான ஆனந்தனையும், சாந்தியையும் கூடக் கவனிக்க முடியவில்லை. மனைவியான கமலா தனியாக இருக்கும் வேளைகளில் அழுவது வாடிக்கையாகி விட்டிருந்தது. வயதாகிப் போன தர்மலிங்கத்தின் தாயார் மட்டும் மனம் தளரவில்லை. "செல்வம் இன்று வரும். நாளை போகும். ஏன் மனம் தளர வேண்டும்." என்று அடிக்கடி சொல்லிக் கொள்ளுவாள். பேரப்பிள்ளைகளான ஆனந்தனும், சாந்தியும் கூடப் பாட்டியுடன் சேர்ந்து சொல்லுவது வழக்கமாகி விட்டது.

அன்று ஆனந்தனுக்குப் பிறந்த நாள். அம்மாவான கமலா வாய்விட்டே அழுது விட்டாள். "சென்றமுறையின் பிறந்த நாளின் போது எத்தனை வகையான சிற்றூண்டி வகைகள், அந்த இடத்தில் வாழ்ந்த பெரிய பணக்காரர்கள், ஆனந்தனின் தோழர்கள் எப்படி எல்லாம் தடல்புடலாகச் செய்தார்கள்." . கமலா ஒருவாறு அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு காலை உணவைத் தயாரித்தாள். சாப்பிடும் போது ஆனந்தன், "அம்மா இன்றைக்கு எனக்குப் பிறந்தநாள். என் நண்பர்கள் எல்லோரையும் வரச் சொல்லி இருக்கிறேன்." என்றான்.

அம்மா கமலா திகைத்து நின்றாள். "வீட்டு நிலை என்ன என்று தெரியாமல் விளையாடுகின்றாயா? திடீரென்று நண்பர்களை வரச் சொல்லி இருக்கிறாயே? சென்ற முறைகளில் செய்தது போல இந்த முறையும் செய்ய முடியுமா? கொஞ்சமும் பொறுப்புணர்ச்சி இல்லாமல் இருக்கின்றாயே?" என்று அழுகையும், ஆத்திரமாகவும் சொன்னாள். "அம்மா! அவர்கள் வருவதால் எந்தப் பிரச்சனையும் இல்லை. நீங்கள் எங்களுக்குச் செய்வதை அவர்களுக்கும் சேர்த்துச் செய்யுங்கள். அது எதுவாக இருந்தாலும் பரவாயில்லை." என்றான்.

"அது சரியா!, நம்மைக் கேவலமாக நினைக்க மாட்டார்களா? என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?" கமலா அழுது கொண்டே கேட்டாள். அப்போது ஆனந்தன் பாட்டியைப் பார்த்தான். பின் அம்மாவான கமலாவிடம், "அம்மா! பாட்டிக்கு வருத்தம் வந்து முதுகுதான் வளைந்திருக்கின்றது. உங்களுக்கு மனமே வளைந்திருக்கின்றது. என் நண்பர்கள் ஆடம்பரமாக இருப்பதற்காக வரவில்லை. என் பிறந்தநாளில் ஒன்றாக இருந்து ஆனந்தமாகப் பொழுதைக் கழிக்க வருகிறார்கள். அவர்களுக்கு நீங்கள் எதுவும் பெரிதாகச் செய்யத் தேவையில்லை. இன்று என்ன செய்ய இருக்கிறீர்கள்? சொல்லுங்கள்!." என்றான்.

"உனக்குப் பிடிக்குமே என்று முறுக்குச் செய்ய இருக்கிறேன். அப்பா வரும்போது கேக் வாங்கிக்

கொண்டு வருவார்." என்றாள். "இதை விட வேறு என்ன வேண்டும். இது போதும்! பாட்டி என்ன சொல்கிறீர்கள்?." என்றான் ஆனந்தன். பாட்டி பேரனை அணைத்துக் கொண்டாள். "ஆனந்தன் பாட்டியின் காதுக்குள் "செல்வம் இன்றுவரும் நாளை போகும். இல்லையா பாட்டி?" என்றான். பாட்டி பேரனைக் கட்டி கொண்டான்.

அதிக கர்வம், அதிகம் பேசுதல், தியாக மனம் இல்லாதது, கோபம், சயநலம், நட்புத் துரோகம் இவைகளே ஆயுளைக் குறைக்கின்ற நோய்கள்.

-மகாபாரதம்-

தேவையில்லாத போது பேசாதிருங்கள், தேவைப்படும் போது தெளிவாகப் பேசுங்கள். தெளிவாய்ப் பேசும்போது தீப்பொறி பறக்கப் பேசுங்கள்.

-பிராங்ளின்-


நீங்கள் பலமுறை தோல்வி கண்டிருக்கிறீர்களா? அப்படி என்றால் நீங்கள் அதிஷ்டம் செய்தவர். ஏனென்றால் உங்களுக்கு எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்ற தெரிந்திருக்கும்.

நெப்போலியன் ஹீல்-

Nektar für die Kinder

Nectar pour les enfants

Nectar for the childrens



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527